சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் - 2021-2022 -ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை - மாண்புமிகு அமைச்சர் (ஆதிதிராவிடர் நலம்) அவர்களின் அறிவிப்பு - வேலூர் மாவட்டம் ஆதிதிராவிடர் நல முதுகலைக் கல்லூரி மாணவியர் விடுதி, விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் மற்றும் சேலம் மாவட்டம், மரவனேரி ஆதிதிராவிடர் நலக் கல்லூரி மாணவர் விடுதிகளுக்கு புதிய கட்டடங்கள் ரூ.10,75,00,000/- செலவில் கட்ட நிர்வாக அனுமதி வழங்குதல் - ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந.2)துறை**

**அரசாணை (நிலை) எண்: 86** **நாள் : 10.11.2021.**

திருவள்ளுவர் ஆண்டு 2052 பிலவ வருடம்,
ஐப்பசி திங்கள் 24 –ஆம் நாள்.
படிக்கப்பட்டது:-

ஆதிதிராவிடர் நல ஆணையரின் கடித ந.க. எண். த3/19663/2021, நாள். 27.09.2021.

*****

**ஆணை:**

08.09.2021 அன்று நடைபெற்ற தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2021-2022ஆம் ஆண்டிற்கான திருத்திய வரவு செலவு கூட்டத்தொடரில் இத்துறையின் மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின் போது, மாண்புமிகு அமைச்சர் (ஆதிதிராவிடர் நலம்) அவர்கள் கீழ்க்கண்ட அறிவிப்பினை வெளியிட்டிருந்தார்.

“ஆதிதிராவிட மாணாக்கரின் உயர் கல்விக்கான வாய்ப்புகளை பெருக்கிடும் வகையிலும், அவர்கள் பாதுகாப்பாக தங்கி கல்வி பயிலும் வகையிலும், வேலூர் ஆதிதிராவிடர் முதுகலை கல்லூரி மாணவியர் விடுதி, விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் மற்றும் சேலம் மாவட்டம், மரவனேரி ஆதிதிராவிடர் கல்லூரி மாணவர் விடுதிகளுக்கு அனைத்து வசதிகளுடன் கூடிய புதிய கட்டடங்கள் ரூ.10.75 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.”

2. மேற்காணும் மாண்புமிகு அமைச்சர் (ஆதிதிராவிடர் நலம்) அவர்களின் அறிவிப்பை செயல்படுத்தும் பொருட்டு, ஆணையர், ஆதிதிராவிடர் நலம் தனது 27.09.2021 நாளிட்ட கடிதத்தில், வேலூர்

ஆதிதிராவிடர் முதுகலை கல்லூரி மாணவியர் விடுதி, விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் மற்றும் சேலம் மாவட்டம், மரவனேரி ஆதிதிராவிடர் கல்லூரி மாணவர் விடுதி ஆகிய மூன்று விடுதிகளின் கட்டுமானப் பணிகளைப் பொதுப்பணித்துறை மேற்கொள்ளும் வகையில், மதிப்பீட்டறிக்கையினை (Detailed Estimate) அனுப்பி வைக்குமாறு பொதுப்பணித்துறை, முதன்மைப் பொறியாளருக்கு கடிதம் அனுப்பப்பட்டது என்றும் மதிப்பீட்டறிக்கை பெறப்பட்ட பின்னர் அம்மதிப்பீட்டின் அடிப்படையில் பொதுப்பணித்துறையால் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவித்துள்ளார். மேலும், அவர் தற்போது, தற்காலிகமாக அவசர நிலை கருதி தாட்கோவிடமிருந்து மூன்று விடுதிகளுக்கும் மதிப்பீட்டறிக்கை (Detailed Estimate) பெறப்பட்டுள்ளது என்பதை தெரிவித்து அவ்விவரங்கள் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

| வ. எண் | மாவட்டம் | ஆதிதிராவிடர் நல விடுதியின் பெயர் மற்றும் அமைவிடம் | மாணாக்கர்கள் எண்ணிக்கை | திட்ட மதிப்பீடு தொகை (கோடியில்) |
|---|---|---|---|---|
| 1. | வேலூர் | முதுகலை கல்லூரி மாணவியர் விடுதி, வேலூர் | 50 | 1.60 |
| 2. | விழுப்புரம் | கல்லூரி மாணவர் விடுதி, திண்டிவனம் | 120 | 3.68 |
| 3. | சேலம் | கல்லூரி மாணவர் விடுதி, மரவனேரி | 180 | 5.47 |
| **மொத்தம்** | | | **350** | **10.75** |

3. எனவே, மேற்குறிப்பிட்டுள்ள மூன்று ஆதிதிராவிடர் நல விடுதிகளில் தங்கி கல்வி பயிலும் மாணவர்கள் மற்றும் மாணவியர்களின் கல்வி மேம்பாட்டு நலன் கருதி, ரூ.10.75 கோடி மதிப்பீட்டில் அவ்விடுதிகளுக்கு புதிய கட்டடங்களை பொதுப்பணித்துறையின் மூலமாக கட்டுவதற்கு ஏதுவாக நிர்வாக மற்றும் நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வழங்கிடுமாறு ஆதிதிராவிடர் நல ஆணையர் அரசினைக் கோரியுள்ளார்.

4. மேற்காணும் ஆதிதிராவிடர் நல ஆணையரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து, ஆய்வுக்குப் பின், மாண்புமிகு அமைச்சர் ஆதிதிராவிடர் நலம் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க ஆதிதிராவிட மாணாக்கரின் உயர் கல்விக்கான வாய்ப்புகளை பெருக்கிடும் வகையிலும், அவர்கள் பாதுகாப்பாக தங்கி கல்வி பயிலும் வகையிலும், வேலூர் ஆதிதிராவிடர் முதுகலை கல்லூரி மாணவியர் விடுதி, விழுப்புரம்

மாவட்டம், திண்டிவனம் மற்றும் சேலம் மாவட்டம், மரவனேரி ஆதிதிராவிடர் கல்லூரி மாணவர் விடுதிகளுக்கு அனைத்து வசதிகளுடன் கூடிய புதிய கட்டடங்கள் ரூ.10,75,00,000/- (ரூபாய் பத்து கோடியே எழுபத்தைந்து இலட்சம் மட்டும்) மதிப்பீட்டில் பொதுப்பணித்துறையின் மூலம் கட்டுவதற்காக ஆதிதிராவிடர் நல ஆணையருக்கு நிர்வாக அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

5. பொதுப் பணித்துறையிடமிருந்து விரிவான மதிப்பீட்டறிக்கைகளை விரைவாகப் பெற்று அரசுக்கு வழங்குமாறு ஆதிதிராவிடர் நல ஆணையர் கேட்டுக்கொள்ளப்படுகிறார். பொதுப்பணித்துறையிடமிருந்து விரிவான மதிப்பீட்டறிக்கை பெறப்பட்ட பின் நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட மேற்காணும் பணிகளுக்கு நிதி ஒப்பளிப்பு வழங்கக் கருதப்படும்.

6. இவ்வாணை நிதித் துறையின் அ.சா.எண்.43377/நிதி(ஆதி(ம)பந)த் துறை / 2021, நாள். 13.10.2021 - இல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**க. மணிவாசன்,**
**அரசு முதன்மைச் செயலாளர்.**

<u>பெறுநர்:</u>
ஆதிதிராவிடர் நல ஆணையர், சென்னை – 600 005.
தலைமைப்பொறியாளர், பொதுப்பணித்துறை, சேப்பாக்கம், சென்னை–600005.
மாவட்ட ஆட்சியர், வேலூர், சேலம் (ம) விழுப்புரம்.
மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்,
வேலூர், சேலம் (ம) விழுப்புரம்.

<u>நகல்:</u>
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை -600 009.
மாண்புமிகு அமைச்சர், (ஆதி(ம)பந) அவர்களின் முதுநிலை
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை -600 009.
பொதுப்பணித்துறை கூடுதல் தலைமை செயலாளரின் தனிச்செயலர்,
சென்னை -600 009.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை
முதன்மை செயலாளரின் தனிச் செயலர், சென்னை - 600 009.

நிதி(ஆதி(ம)பந)துறை, சென்னை -600 009.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (அநமு.1/ஆதிந.4/ ஆதிந.5 ) துறை, சென்னை -600 009.

இருப்புக்கோப்பு /உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

ரா. தங்கம்
10.11.2021
பிரிவு அலுவலர்.